DINAMANI - 10-08-2023

# ஓணம் பண்டிகை: ஆகஸ்ட் 29 உள்ளூர் விடுமுறை

கோவை, ஆக. 9: ஓணம் பண்டிகையை முன்னிட்டு, கோவை மாவட்டத்துக்கு ஆகஸ்ட் 29ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு, கோவை மாவட்டத்தில் உள்ள மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஆகஸ்ட் 29ஆம் தேதி உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக அந்த அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் செப்டம்பர் 2ஆம் தேதி முழு பணி நாளாக செயல்படும்.

உள்ளூர் விடுமுறை நாளில் மாவட்டத்தில் உள்ள கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலகங்கள் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி தெரிவித்துள்ளார்.